# வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமையை புரிந்துகொள்தல்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council
Toronto Chapter

Ontario

வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமை பற்றிய புரிதல் இல்லாமல், இனவாதத்திற்கான மூல காரணங்களைப் பற்றி பேசுவது மிகவும் கடினம். ஆயினும், வெள்ளையரின் சிறப்புரிமையை அங்கீகரிப்பதில், இனமயமாக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட பிற மக்களின் அனுபவங்களை மையப்படுத்துவதும் முக்கியம்.

வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமை என்றால் என்ன?

இன சமத்துவமின்மை மற்றும் அநீதியை தன் பண்பாய்க் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் இனத்தின் அடிப்படையில் ஒரு வெள்ளை நபருக்கு இயல்பாகவே கிடைக்கும் நன்மைகள்.

"[ஒரே சூழ்நிலையில்] வெள்ளையரல்லாத இனத்தவர்களை விட அதிகாரம் மற்றும் வளங்களுக்கான கூடுதல் அணுகலைப் பெறல்.’’



# Peggy McIntosh-இன் "வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமை: கண்ணுக்கு தெரியாத பையை பிரித்துப் பார்த்தல்." (Peggy McIntosh’s “White Privilege: Unpacking the Invisible Knapsack.”)

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

Tamil Canadian Centre for Civic Action

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

1989 இல் வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமை பற்றிய ஒரு அற்புதமான கட்டுரையை Peggy McIntosh வெளியிட்டார். அவரது அந்த படைப்பில், வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமையை ஆழ்நிலை செயல்முறை, கண்ணுக்கு புலப்படாதது, தற்செயலானது என விவரிக்க கண்ணுக்கு புலப்படாத பை (invisible knapsack) எனும் உருவகத்தை பயன்படுத்தியுள்ளார்.

வெள்ளையர்களுக்கு தாம் இத்தகைய அதிகாரங்களையும் சிறப்புரிமைகளையும் (சலுகை) கொண்டுள்ளோம் எனும் விழிப்புணர்வு இன்மையால், பாகுபாடு நிலைத்திருப்பதாக McIntosh விளக்குகிறார்.

(McIntosh வரையறுத்தபடி) வெள்ளையராய் இருப்பதால் கிடைக்கும் சலுகைகளுக்கான (சிறப்புரிமைகளுக்கான) சில எடுத்துக்காட்டுகள் :

- தொலைக்காட்சியை போடுகையில் உங்கள் இனத்தவர் அதிக அளவில் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பதை காண்பது.

# ஆழ்ந்த சூழமைவு - பிரக்ஞைகொண்ட ஆயுதமாக வெள்ளையருக்கான சிறப்புரிமைகள்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

Chinese Canadian National Council
Toronto Chapter

Ontario

McIntosh-இன் புரிதல் வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமையின் பிரக்ஞையற்றதும் கண்ணுக்கு புலப்படாததுமான நன்மைகளை விளக்கியது. இருப்பினும், பிரக்ஞைபூர்வமான தெரிவுகளின் பின்னரான தாக்கங்கள் உட்பட, வெள்ளையராய் இருப்பதன் சலுகைகளை கோடிட்டுக் காட்டிய வெள்ளையர் அல்லாத பலரையும் அது மறைக்கிறது.

வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமை என்பது ஒப்பனை மற்றும் பொழுதுபோக்கு பிரதிநிதித்துவம் போல எளிமையானது அல்ல, அது கட்டமைப்பு ரீதியான தீர்மானங்களில் தாக்கம் செலுத்தும் திறனையும் கொண்டுள்ளது.

இனவாதத்தின் ஒரு காரணமாகவும் பின்விளைவாகவும் வெள்ளையருக்கான சிறப்புரிமை இருக்கிறது. இது வரலாற்று ரீதியில் இனவாதத்தையும் பாகுபாடுகளையும் தாங்கி நிற்கிறது.

"வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமை அவர்கள் அறியாமலே அனுபவிக்கப்படுவதுடன், அறிந்தும் நிலைத்திருக்கிறது. இது அமெரிக்கர்களின் வாழ்வில் மேலோட்டமாகவும் உட்புறமாகவும் ஆழப் பொதிந்துள்ளது. இதுவொரு சுமையற்ற பொதியாகவும் (weightless knapsack) ஆயுதமாகவும் இருக்கிறது."

# வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமையின் மூன்று அம்சங்கள்:

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

## இயல்புநிலையின் அதிகாரம்

இயல்புநிலையின் அதிகாரம் எனும் வகையில் "வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமையை" விளக்க பயன்படுத்தப்படும் சில உதாரணங்கள்:

கடந்த பல ஆண்டுகளாக Bandaid-கள் வெள்ளையர்களின் தோல் நிறத்துடன் பொருந்தக்கூடிய நிறத்தில் மாத்திரமே விற்பனை செய்யப்படுகின்றன.

இது பெரும்பாலும் ஆழ் மனதைச் சிறிய அளவில் சேதப்படுத்தும் என வரையறுக்கும்படியான, வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமைக்கான, எளிதானதும் சகித்துக்கொள்ளக்கூடியதுமான அறிமுகமாகும்.

இருப்பினும் இந்த சிறப்புரிமைகள் ‘இயல்புநிலையின் அதிகாரத்திற்கான’ குறியீடுகள்.

**"வெள்ளையர்கள் தங்கள் தேவைகள் உடனடியாக பூர்த்தியாகும் என்ற எதிர்பார்ப்புடன் உலகம் முழுவதும் செல்ல அதிக வாய்ப்புள்ளது. பிற இனத்தவர்கள் தங்கள் தேவைகள் மட்டுப்பத்தப்பட்ட அளவிலேயே பூர்த்தியாகும் எனும் புரிதலுடன் பயணிக்கிறார்கள். இதை அங்கீகரிப்பது என்பது எங்கு இடைவெளிகள் உள்ளன என்பதை அங்கீகரிப்பதாகும்."**

# "ஐயத்தின் பலன்" எனும் அதிகாரம்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்


TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

வெள்ளையர்கள் திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்திகளில் தங்களைப் பற்றிய நேர்மறையான பிரதிநிதித்துவங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

அவர்கள் படிவார்ப்பு (ஒரே மாதிரியான) இன அடையாங்கள் மூலம் புரிந்துகொள்ளப்படுவதை விட தனி நபர்களாக நடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதே இதன் பொருள் - இதனால் ஐயத்தின் பலன் அவர்களுக்கு வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.



**எடுத்துக்காட்டு :**

வெள்ளையர்கள் "ஐயத்திற்குரியவர்கள்" என்ற அடிப்படையில் காவல்துறை அதிகாரிகளால் தற்செயலாக நிறுத்தப்படவோ, விசாரிக்கப்படவோ அல்லது தேடப்படவோ வாய்ப்புகள் குறைவு.

வெள்ளையரல்லாத இனத்தவர்கள் தங்களின் இனம் சார்ந்த விவரக்குறிப்பிற்குப் பலியாகி, எதிர்மறையான படிவார்ப்பு சிந்தனைகள் மற்றும் கொள்கைகளின் ஆழமான மற்றும் நீடித்த விளைவுகளை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் அதிகம்.

# அதிகாரக் குவிப்பின் அதிகாரம்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

காலப்போக்கில் இணைந்துகொண்ட கட்டமைப்பு ரீதியான இனவாதத்தால் கிடைக்கப்பெற்ற அதிகாரக் குவிப்பின் மூலம் வெள்ளையராய் இருப்பதன் சிறப்புரிமைகளை காணலாம்.

Chinese Canadian National Council
Toronto Chapter

எடுத்துக்காட்டாக, செல்வ சமத்துவமின்மையும் அதனுடன் இணைந்த இனவாத படிவார்ப்பு சிந்தனைகளும்.

இந்த அதிகாரக் குவிப்பின் அதிகாரம் இன சமத்துவமின்மைக்கு எதிராக அமைதியாக இருக்கும் அதிகாரமும் கூட.

பேசுவதில் உள்ள அசௌகரியம் அல்லது சிரமத்திற்கு எதிராக எதிர்ப்பு அல்லது மோதலின் தேவையை எடைபோடும் அதிகாரம் இது.


நீங்கள் எப்போது, எங்கே ஒரு நிலைப்பாட்டை எடுக்க விரும்புகிறீர்கள் என்பதை இது தெரிவு செய்கிறது. நீங்களும் உங்கள் மனிதநேயமும் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்பதை அறிவது. அது எத்தகையதொரு பாக்கியம்."

இனவெறி
மற்றும்
வெறுப்புக்கு
எதிரான
ஆசிரியர்கள்

# Check out these Ontario-based community organizations involved in racial justice work on Instagram!

- Urban Alliance on Race Relations (UARR) **@uarrtoronto** - non-profit organization working to address inequality with educational programs, advocacy & research
- Ontario Alliance of Black School Educators (ONABSE) **@onabse_org** - an organization that works to promote equity for African Canadian students, educators, and professionals at all levels in schools
- The National Council of Canadian Muslims (NCCM) **@nccm_community** - an organization that protects Canadian human rights and civil liberties, challenges discrimination and Islamophobia, builds mutual understanding, and advocates for the public concerns of Canadian Muslims
- Chinese Canadian National Council Toronto Chapter (CCNCTO) **@CCNCTO** - an organization working to promote equity, social justice, inclusive civic participation, and respect for diversity.
- The Council of Agencies Serving South Asians (CASSA) **@cassaonline** - an umbrella organization supporting and advocating for the needs of the Canadian South Asian community





# Works Cited


Collins, C. (2018). What Is White Privilege, Really?. *Teaching Tolerance Magazine*, 39–41. https://www.learningforjustice.org/sites/default/files/2018-09/Teaching-Tolerance-magazine-60_1.pdf/'

McIntosh, P. (2007). White privilege: Unpacking the invisible knapsack. *Race, class, and gender in the United States: An integrated study*, 177-82.


இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council
Toronto Chapter

Ontario